தமிழ்ப் பாதுகாப்புக் கழக வெளியீடு—௩

ஓம்

வடசொல் தமிழ் அகரவரிசைச் சுருக்கம்

[வடசொற் கலப்பின்றிப்
பேசவும் எழுதவுங் கற்பிப்பது]

தனித்தமிழ்ப் பேராசிரியர்
மறைமலையடிகளின் மகளாரும்,
சென்னை நார்த்விக் மகளிர் கல்லூரித்
தமிழாசிரியரா யிருந்தவருமாகிய
திருவாட்டி தி. நீலாம்பிகையம்மையார்
இயற்றியது.

கிடைக்குமிடம்:

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி .... சென்னை. 1.

4-ம் பதிப்பு:

முகவுரை

சென்ற எழுநூறு எண்ணூறு ஆண்டுகளாக நம் தாய் மொழியாய செந்தமிழ்ச் சீரிய மொழியில் ஏராளமான வடசொற்கள் வந்து கலந்துவிட்டன. ஐயகோ! இதனாலேயே பழந் தமிழ்ச் சொற்களில் பல வழங்கா தொழிந்தன. தமிழிற் கலந்து அதனை முற்றும் வேறுபடுத்தும் வடசொற்களை இப்போதே நாம் களைந் தொதுக்காவிடின் தமிழ் தன் நிலைகெட்டு வேறுமொழிபோ லாகுமென்பதற்கு ஐயமில்லை. இங்ஙனம் வேற்றுமொழிக் கலப்பால் தமிழ்மொழி திரிபுற்றமையினாலேதான் அஃதொன்றிலிருந்தே 'மலையாளம்,' 'கன்னடம்,' 'தெலுங்கு' முதலான பல வேறு மொழிகள் கிளைத்தன.

இக்காலத்துத் தமிழ் மக்களிற் பெருந்தொகையினர் வடசொற்களையுந் தமிழ்ச்சொற்களையும் பிரித்தறிய முடியாதவர்களாகித் தாம் எழுதுவதிலும் பேசுவதிலும் வடசொற்களை மிகைபடக் கலந்து எழுதியும் பேசியும் தமிழின் தூய்மையையும், இனிமையையும், பழமையையுங் கெடுத்து வருகின்றனர்.

என் இளமைக்காலத்தே என் அருமைத் தந்தையார் மறைமலையடிகளாரிடம் கல்வி பயின்றமையால், வடசொற் கலப்பினால் தமிழ் தன் நிலைதிரிந்து கேடுறுவதை யான் அறிந்து வருந்தலானேன். அதுமுதல் வடசொல் தமிழ்ச்சொற்களை ஆராய்வதில் ஈடுபட்டு, 'வடசொற் றமிழ் அகரவரிசை' என்னும் நூலை இயற்றி உகூஉ பக்கங்களில் சென்ற ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டுள்ளேன்.

இப்போது பேச்சுவழக்கில் மிகைபட வழங்கிவரும் ஓராயிரம் வடசொற்களைமட்டும் எடுத்து இச்சுருக்கநூலைத் தமிழ்ப் பாதுகாப்புக் கழக வெளியீடாக வெளிப்படுத்துகின்றேன். மிகவும் எளிய விலைக்குக் கிடைக்கப் பெறும் இவ்வரிய நூலைப் பெற்று இனி இயன்றவரை தனித்தமிழில் எழுதவும் பேசவும் பழகிக்கொள்ளுமாறு தமிழ்நன்மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாளையங்கோட்டை,
18—9—38.

தி. நீலாம்பிகை.

ஓம்

வடசொல் தமிழ்

அகரவரிசைச் சுருக்கம்

அகங்காரம் - செருக்கு, இறுமாப்பு, முனைப்பு, யானெனல்
அகசுமாத்து, அகஸ்மாத்து - தற்செயல், திடீரெனல்
அகதி - வறியன், யாருமற்றவன்
அகந்தை - இறுமாப்பு, செருக்கு
அகம்பாவம் - தற்பெருமை, செருக்கு
அகராதி - அகரவரிசை
அகற்பிதம் - இயல்பு
அகாதன் - புரட்டன்
அகாலமரணம் - முதிராச்சாவு
அகாலம் - தகாக் காலம்
அகிம்சை - இன்னா செய்யாமை, கொல்லாமை
அகிலம் - எல்லாம், உலகு, வையம், நிலம்
அகோசரம் - அறியொணாதது
அகோரம்-சினக்குறிப்பு, நடுக்கம்
அகோராத்திரம்-அல்லும் பகலும்
அக்காரம் - வெல்லம்
அக்ஷி - கண், கொப்புளம்
அக்கிரகாரம் - பார்ப்பனச்சேரி
அக்கிரமம் - ஒழுங்கின்மை, முறைகேடு
அக்கிராசனம் - முதலிருக்கை, தலைமை
அக்கிராசனாதிபதி - அவைத் தலைவர், முதல்வர்
அக்கினி - நெருப்பு, தீ, அனல், எரி, தழல்
அக்கினிகாரியம் - எரியோம்பல்
அக்கினி நட்சத்திரம் - தீநாள்
அங்க சேட்டை - உறுப்பு அசைவு
அங்கம்-உறுப்பு, எலும்பு, அடையாளம்
அங்கவீனன் - உடற்கேடன், உறுப்பறையன்
அங்கீகரணம், அங்கீகாரம்-உடன்பாடு, ஒப்பு
அங்குசம் - யானைத்தோட்டி, கொக்கி
அங்குட்டம் - பெருவிரல்
அங்குலம்-விரற்கடை, விரலளவு
அசந்தர்ப்பம் - நேரமின்மை, காலத்தவறு
அசமந்தம் - சோம்பல், மடி, மலைவு
அசரீரி - உருவற்றது, வானொலி
அசம் - ஆடு
அசல் (இந்துஸ்தானி) - முதல், மூலம்
அசாக்கிரதை - விழிப்பின்மை, கருத்தின்மை, அசட்டை
அசாத்தியம் - அருமை, முடிக்கக் கூடாதது
அசீரணம் - பசியின்மை, செரியாமை
அசுத்தம் - அழுக்கு, துப்புரவின்மை, தூய்மையின்மை
அசுபம்-நன்மையல்லாதது, தீமை, தீயது
அசுவம் - குதிரை

அஞ்சனம் - மை, கறுப்பு
அஞ்ஞாதம் - மறைவு
அஞ்ஞாதவாசம் - மறைந்துறை [தல்
அஞ்ஞானம் - அறியாமை, இருள், மருள்
அட்சரம் - எழுத்து
அட்டகம் - எண்வகை
அட்டகாசம் - பூளி
அணிமா - அணுத்தன்மை
அதிகம் - மிகுதி
அதிகாந்தம் - பேரழகு
அதிகாரம் - இயல், நூற்கூறு- பாடு, ஆட்சி
அதிகாரி - தலைவன், முதல்வன்
அதிசயம் - புதுமை, வியப்பு
அதிட்டம்-செல்வம், நல்வினைப் பயன், நன்னுகர்ச்சி
அதிதி - விருந்தினன், புதியவன்
அதோகதி - கீழிறக்கம், பள்ளம்
அத்தமனம், அஸ்தமனம் - சாய்ங் காலம், மாலை, மறைவு, அடைவு
அத்தம், அஸ்தம் - கை
அத்தி, அஸ்தி - எலும்பு
அத்திபாரம், அஸ்திபாரம்-அடிப் படை, கடைக்கால்
அத்தியட்சன் - தலைவன், கண் காணி
அத்தியந்தம் - மிகுதி, மட்டற்றது
அத்தியாயம்-படலம், நூற்பிரிவு
அத்திரம், அஸ்திரம் - அம்பு
அத்துவிதம் - இரண்டற்றது
அநந்தம் - அளவின்மை, முடி வில்லது
அநர்த்தம் - பயனின்மை, கேடு, வேறுபாடு
அநவரதம் - எப்பொழுதும்
அநாகதம் - நெஞ்சம்
அநாதி - முன், பழமை, கடவுள்
அநாதை - யாருமற்றவன்
அநியாயம் - முறையின்மை, நடு வின்மை, விலக்கு
அநிருதம் - பொய்
அநீதி - முறைகேடு
அநுகூலம் - கைகூடுதல், பயன், உதவி, நன்மை, துணை
அநுக்கிரகம் - அருளிரக்கம், அருள்
அநுசரித்தல் - பின்பற்றல், கைக் கொள்ளல்
அநுட்டானம் - செயற்பாடு, நடைமுறை
அநுட்டித்தல் - பின்பற்றல்
அநுதினம் - நாடோறும்
அநுபந்தம் - பின் சேர்க்கை, தொடர்ச்சி, அடுத்து யாக்கப் படுவது
அநுபவம் - பழக்கம், நுகர்ச்சி, அழுந்தியறிதல்
அநுபவித்தல் - துய்த்தல், நுகர் தல், துவ்வல்
அநுபானம் - துணைமருந்து, கூட்டுமருந்து
அநுபோகம் - பழக்கம், வழக்கம், ஆட்சி, நுகர்ச்சி, துய்ப்பு
அநுமதி - உடன்பாடு, விடை, கட்டளை, ஆணை, ஒப்புதல்
அநுமானம் - ஐயம், வழியளவை
அநேகம் - பெரும்பான்மை, பல
அந்தகன் - கூற்றுவன், குருடன்
அந்தஸ்து - நிலைமை, ஒழுங்கு, நிலை
அந்தம் - அழகு, முடிவு, குருடு, ஈறு, கேடு, எல்லை
அந்தரங்கம் - அருமறை, மறை பொருள், உள்ளம், தனிமை
அந்தரம் - வான், வெளி, இடை வெளி, துணையின்மை, காலம்
அந்தரவாணி - வானொலி
அந்நியம் - அயல், வேறு, வேற் றுமை, பிறிது
அந்நியோந்நியம்-நெருக்கம், ஒற் றுமை, ஒருவர்க்கொருவர்

அபகரித்தல் - கவர்தல், கொள்ளையிடல், பறித்தல், வவ்வல்
அபகாரம்-தீங்கு, பொல்லாங்கு, நன்றியில் செயல்
அபசயம் - தோல்வி
அபத்தம் - பொய், தவறு
அபயம் - அடைக்கலம்
அபரஞானம் - கருவியறிவு, நூலறிவு
அபராதம் - ஒறுப்புக்கட்டணம், குற்றம், பிழை
அபவிருத்தி - குறைவு
அபாண்டம் - பெரும்பொய், பெரும்பழி, இடுபழி
அபாயம், அபாயகரம் - பேரிடர், அழிவு, கேடு, துன்பம், இடுக்கண்
அபானவாயு - மலக்காற்று
அபிடேகம், அபிஷேகம் - திருமுழுக்கு, புதுப்புனலாட்டு
அபிநயம் - உள்ளக்குறிகாட்டல், கைமெய்காட்டல், கூத்து
அபிப்பிராயம் - நோக்கம், எண்ணம், உட்கருத்து, உட்கோள், உள்ளப்போக்கு, கொள்கை
அபிமானம் - பற்று, நேயம், செருக்கு
அபிவிருத்தி-பெருக்கம், ஆக்கம், வளர்ச்சி
அபூர்வம் - அருமை, அரிய பொருள்
அபேட்சை - அவா, விருப்பம்
அபேதம் - வேற்றுமையின்மை, வேறன்மை
அப்பியாசம் - பழக்கம், பயிற்சி
அப்பிராணி-ஏழை, கரவிலான், பேதை
அப்பு - புனல்
அமரபக்ஷம் - தேய்பிறை
அமாவாசை – புதுப்பிறை, பிறை யுவா
அமுது - சோறு, அடிசில், இனிமை
அம்சம் - வகை, அன்னப்புள், காலம், எண், பங்கு
அம்பாரம் - குவியல்
அம்பிகை - தாய், அம்மை
அயச்செந்தூரம் - இரும்புச் செந்தூள்
அயபஸ்பம்-இரும்புவெண்ணீறு
அயோக்கியதை - தகுதியின்மை, தகாதது
அரம்பை, ரம்பை - தெய்வப் பெண், அரிவை, வான்மகள்
அரவம் - ஒலி, பாம்பு
அராகம் - விருப்பு
அருணோதயம் - வைகறை, விடியல், கதிரோன்வருகை
அருத்தம், அர்த்தம் - பொருள், பாதி
அருவம் - உருவின்மை, அழகின்மை
அர்ச்சனை, அருச்சனை-பூவழிபாடு மலர்தூவழிபாடு, பூசை
அர்த்தசாமம் - நள்ளிரவு
அர்த்தநாரீசுரன்-மங்கைபங்கன், மாதிருக்கும் பாதியன்
அர்ப்பணம் - நீரொடு கொடுத்தல், உரிமைப்படுத்தல், ஒப்புவித்தல்
அலங்காரம் - அழகு, ஒப்பனை, அணி, புனைவு
அலட்சியம் - பொருட்படுத்தாமை, கருத்தின்மை
அலுவா - கோதுமைத் தேம்பாகு
அவகாசம் - ஒழிவு, ஓய்வு
அவசரம் - விரைவு, பரபரப்பு, சுருக்கு, பதைப்பு
அவசியம் - முதன்மை, கட்டாயம், இன்றியமையாமை
அவதாரம் - பிறப்பு, இறங்குகை

அவதி - துன்பம்
அவத்தை - நிலே, துன்பம், நிலேமை
அவதூறு - பழிச்சொல்
அவமானம் - மானக்கேடு, புகழின்மை, இழிவு
அவயவம் - உறுப்பு
அற்பம் - சிறுமை, அணு, புன்மை
அற்புதம் - புதுமை, வியப்பு, அருள்நிகழ்ச்சி, அரிய செயல்
அனுபவம் - துய்ப்பு
அனுபோகம் - நுகர்ச்சி
அன்னசத்திரம் - ஊட்டுப்புரை
ஆகாசம் - விண், வெளி, வான், விசும்பு, வானம்
ஆகாயவிமானம் - வானவூர்தி
ஆகாரம் - உணவு, அடிசில்
ஆகுலம் - ஆரவாரம், வருத்தம்
ஆக்னேயம் - புருவநடு
ஆசங்கை - ஐயம்
ஆசமனம் - குடித்தல்
ஆங்காரம்-இறுமாப்பு, செருக்கு, தருக்கு
ஆசர், ஆஜர் (உருது) - நேர்வருகை
ஆசனம் - இருக்கை, அணே
ஆசனவாய் - எருவாய், மலவாய்
ஆசாபாசம்-அவாக்கட்டு, அன்பு, உலகப்பற்று
ஆசாமி - (உருது) ஆள்
ஆசாரம் - ஒழுக்கம், வழக்கம், நன்னடை, துப்புரவு
ஆசியம் - எள்ளல், நகை, சிரிப்பு
ஆசிரமம் - பள்ளி, பாழி, முனிவருறையுள்
ஆசீர்வாதம் - வாழ்த்துரை
ஆசை - விருப்பம், அவா, பற்று, வேட்கை, விழைவு
ஆச்சரியம் - புதுமை, வியப்பு, இறும்பூது
ஆஸ்தி - பொருள், செல்வம்
ஆஸ்திகன் - கடவுட் கொள்கையன்
ஆஸ்பத்திரி - மருத்துச்சாலே
ஆக்கிராணம் - மூக்கு
ஆக்ஞை - ஆணே, கட்டளே
ஆடம்பரம் - ஆரவாரம்
ஆட்சேபம் - தடை, மறுப்பு, எதிர்மொழி
ஆதரவு - துணே, உதவி, சார்பு, பற்றுக்கோடு, நிலேக்களன்
ஆதாரம் - பற்றுக்கோடு, நிலேக்களன், களேகண், சான்று, அடிப்படை
ஆதி - முதல், பழமை, அடி, தொடக்கம், காரணம், எழுவாய், கடவுள்
ஆதிக்கம் - உரிமை, முதன்மை, மேன்மை, தலேமை, மேலீடு
ஆதியந்தம் - அடிமுதல்
ஆதியோடந்தமாய் - ஒன்றும் விடாமல், முதலிலிருந்து கடைசிவரை
ஆதிரம் - நெய்
ஆதுலம் - வறுமை
ஆத்திரம் - விரைவு, பரபரப்பு
ஆத்துமா, ஆன்மா - உயிர்
ஆநந்தம் - இன்பம்
ஆநந்தபரவசம் - இன்பவயம்
ஆந்திரதேசம் - தெலுங்குநாடு
ஆபத்து - இடர், துன்பம், இக்கட்டு, ஊறுபாடு
ஆபாசம் - அருவருப்பு, பொய், சிதைவு, அளவைப்போலி
ஆப்தம் - அன்பு, நட்பு
ஆமோதித்தல் - உடன்படல், வழிமொழிதல், மகிழ்தல்
ஆயத்தம் (ஹிந்தி) - முயற்சி, முன்னேற்பாடு
ஆயாஸம் - களேப்பு, இளேப்பு, சோர்வு, அயர்வு, மயக்கம்

ஆயுசு, ஆயுள்-வாழ்நாள், ஆண்டு
ஆயுதம் - கருவி, படைக்கலம், படை, வாள்
ஆரணியம் - காடு
ஆரம் - பூமாலை, தொடையல்
ஆரம்பம் - துவக்கம், தொடக்கம்
ஆராதனை - வழிபாடு
ஆராதித்தல் - வழிபடுதல்
ஆரியம் - வடமொழி
ஆரியர் - மிலேச்சர்
ஆரூடம் - முன்னறிதல்
ஆரோகம் - ஏற்றுதல்
ஆரோக்கியம்-நலம், நோயின்மை
ஆலயம் - கோயில்
ஆலிங்கனம் - தழுவல்
ஆலோசனை - சூழ்ச்சி, சூழ்தல், ஓர்வு, எண்ணம், ஆராய்ச்சி
ஆவசியம்-கட்டாயம், முதன்மை, இன்றியமையாமை
ஆவலாதி - புறங்கூற்று, புறந் தூற்றல்
ஆவேசம் - மருள், தெய்வமேறல், உட்புகல், பேய்
இகம் - இவ்வுலகம், இவ்விடம், இப்பிறப்பு
இக்கணம் - இப்போது
இச்சகம் - முகமன்
இச்சை - விருப்பம், அவா, விழைவு, வேட்கை
இடங்கம் - உளி
இடபம் - எருது, காளை, ஏறு
இடம்பம் - ஆரவாரம், வீண் பெருமை
இட்டம், இஷ்டம் - அன்பு, விருப்பம்
இஷ்டன் - நண்பன்
இதம், ஹிதம்-இனிமை, நன்மை, அன்பு, அறம்
இதரம் - வேறு, அயல், அழிவு, பகைமை
இதாதீதம் - நன்மைதீமை
இந்திரியங்கள் - ஐம்பொறிகள்
இமிசை - கடுந்துன்பம், வருத்தம்
இயந்திரம் - பொறி, மறைமொழித்தகடு
இயமன், எமன் - கூற்றுவன், காலன், மறலி
இரகசியம்-மறைபொருள்,மறை, அற்றம்
இரசம் - சாறு, மிளகுநீர்
இரசவாதம் - பொன்னுக்கல்
இரசாபாசம்-அருவருப்பு, ஒழுங்கின்மை
இரசிகன் - சுவைஞன்
இரசித்தல் - சுவைத்தல்
இரட்சித்தல் - காப்பாற்றல், புரத்தல், ஓம்புதல்
இரணவைத்தியம் - புண்மருத்துவம், அறுவைமருத்துவம்
இரதம் - தேர்
இரத்தம் - குருதி, செந்நீர்
இரத்தினம் - மாமணி, செம்மணி
இரம்பம் - ஈர்வாள்
இராகம் - இசை, பண், அவா
இராஜஸ்ரீ - திரு
இராஜா - அரையன், மன்னன்
இராஜதானி - அரசர்தலைநகர்
இராசதம் - மனவெழுச்சி
இராசி - ஓரை
இராச்சியம் - அரசியல், நாடு
இராணுவம் - போர்ப்படை
இராத்திரி - இரவு, கங்குல்
இருசால் - இறைப்பணம், திறை
இருடி - முனிவன், தவசி, துறவி
இருதயம், இதயம் - நெஞ்சம், உள்ளம், அன்பு
இருது, ருது - பருவம், மகளிர் முதற் பூப்பு
இருதுமங்களஸ்நானம் - பூப்பு நன்னீராட்டு
இருதுசாந்தி - பூப்புக் கழிப்பு

இரேகை - வரி, எழுத்து, கையிறை, நிறை, தொடர்
இலகான் (இந்தஸ்) - கடிவாளம்
இலகிமா - மென்மை
இலக்கம், இலட்சம்-எண், நூறுயிரம்
இலக்குமி - திருமகள், அழகு, செல்வம்
இலஞ்சம் - கைக்கூலி, கையுறை
இலட்சணம் - அழகு, பார்வை
இலட்சியம் - குறிக்கோள்
இலயம், லயம் - ஒடுக்கம், அழிவு
இலவசம் - விலையின்மை
இலவணம் - உப்பு
இலவுகிகம் - உலகியல், உலகப் போக்கு
இலாகா - ஆட்சி, எல்லை
இலாகிரி - வெறி, மயக்கம்
இலாடம் - காற்பரளை
இலாபம்-ஊதியம், மிச்சம், பேறு
இலாபநஷ்டம் - கூடுதல் குறைதல், ஊதியமும், பொருட்கேடும்
இலாயம் - குதிரைப்பந்தி
இலாவாதேவி - கொடுக்கல் வாங்கல், பண்டமாற்று
இலிங்கம் - குறி, அடையாளம்
இலேகியம் - பாகுமருந்து, இளகம்
இலேஞ்சு - மேலாடை
ஈசன் - தலைவன், ஆள்வோன்
ஈசானம் - வடகிழ்ப்பால்
ஈசுரநிச்சயம் - கடவுளுண்மை
ஈடணம் - விருப்பம்
ஈனம்-இழிவு, குறைபாடு, குறைவு
உக்கிரம் - கொடுமை, வெப்பம், சினம், ஊக்கம், மிகுதி
உக்கிராணம் - களஞ்சியம், சரக்கறை
உசிதம் - உயர்வு, சிறப்பு, மேன்மை, தகுதி, ஒழுங்கு
உச்சந்தம் - தளர்வு
உச்சரிப்பு - எழுத்தோசை
உச்சி - மேடு, முகடு
உஷ்ணம் - வெப்பம், சூடு
உதயம - காலை, விடியல், பிறப்பு, வெளிப்படல், தோற்றம்
உதரம் - வயிறு
உதாரம், உதாரகுணம் - வள்ளன்மை, தண்ணளி, ஈகைத் தன்மை
உதாரணம் - எடுத்துக்காட்டு, சான்று
உதித்தல்-பிதற்றல், தோன்றுதல்
உதிரம் - செந்நீர், குருதி
உத்தமம் - உண்மை, மேன்மை
உத்தமி - கற்புடையவள்
உத்தரம் - மறுமொழி
உத்தரவு - கட்டளை
உத்தியோகம்-அலுவல், முயற்சி, தொழில்
உத்தேசம் - கருத்து, மதிப்பு, ஏறக்குறைய
உந்நதம் - உயர்ச்சி, மேன்மை
உபகரணம் - கொடுத்தல், உதவிப் பொருள், கருவிப்பொருள்
உபகாரம் - உதவி, நன்றி
உபசாரம் - வரவேற்பு, முகமன், வேளாண்மை
உபதேசம் - அருண்மொழி, அறிவுரை
உபத்தம் - கருவாய்
உபத்திரவம் - இடர், இக்கட்டு, துன்பம், வருத்தம், தடை
உபநதி - கிளையாறு
உபநயனம் - பூணூற்சடங்கு, வழிநடத்துதல், மூக்குக்கண்ணாடி
உபந்நியாசம் - சொற்பொழிவு
உபயோகம் - பயன்
உபவனம் - பூஞ்சோலை
உபாசனை - வழிபாடு, வணக்கம்
உபாதி - நோய், துன்பம்

உபாத்தியாயன் - ஆசிரியன், கற்பிப்போன், கணக்காயன்
உபாத்தியாயினி - கற்பிப்போள், ஆசிரியை
உபாயம் - சூழ்ச்சி, நொய்மை, எளிது, சிறிது
உபேட்சை - அசட்டை, விருப்பின்மை, வெறுப்பு
உயிர்ப்பிராணி - உயிர்ப்பொருள்
உருக்குமணி - பொன்மணி
உருசி - சுவை
உருத்திராக்கம்-சிவமணி, அக்குமணி
உருபித்தல் - மெய்ப்பித்தல்
உரொக்கம் - கைப்பணம், இருப்பு, மொத்த இருப்பு
உரோகம் - நோய், ஒளியின்மை
உரோமம் - மயிர், முடி, குஞ்சி
உலகப்பிரசித்தி - எங்கும் பரந்த புகழ்
உலோகம் - உலகம், வெள்ளி, பொன், செம்பு முதலியன
உலோபம்-ஈயாமை, இவறன்மை, கடும்பற்றுள்ளம்
உல்லாசம் - மகிழ்ச்சி, விளையாட்டு, உள்ளக்களிப்பு
உற்சவம் - திருவிழா, திருநாள்
ஊகித்தல் - நினைத்தல், ஓர்தல்
ஊர்ச்சிதம்-உறுதி, நிலைப்படுதல்
ஊநம் - குறைவு, இழிவு
எக்கியம் - வேள்வி
எசமானன்-தலைவன், முதல்வன்
எதார்த்தம் - உறுதி, உண்மை
எதேச்சை - விருப்பப்படி
எவ்வநம், யௌவநம் - இளமை, அழகு
ஏகதேசம் - ஒருபால், ஒருபுடை, சிறுபான்மை
ஏகம் - ஒன்று, தனிமை
ஏகாங்கி - தனியன், துறவி
ஏகாதிபத்தியம் - தனியரசாட்சி
ஏகாந்தம் - தனிமை, ஒருமுடிவு
ஏடணை - விருப்பம்
ஏதம் - குற்றம், துன்பம், தீங்கு
ஏது - காரணம்
ஏனம் - பன்றி
ஐக்கியம் - ஒற்றுமை
ஐச்வரியம் - செல்வம், திரு
ஐதிகம் - உலகுரை
ஓமம் - வேள்வி
ஔடதம் - மருந்து
ஔபாசனம் - வேள்வித்தீயோம்புதை, உணவொழிநோன்பு, எரியோம்பல்
கங்கணம் - காப்பு
கடகம் - வாள்
கட்சி, கக்ஷி - பக்கம், சார்பு
கஷாயம் - மருந்துக் குடிநீர்
கடினம் - வன்மை, கடுமை, வருத்தம், கொடுமை
கடூரம் - கொடுமை
கஷ்டம் - துன்பம், வருத்தம்
கஷ்டசாத்தியம் - அரிதின்முடிவது
கணபதி - பிள்ளையார்
கணிதம் - கணக்கு
கண்டம் - நிலப்பிரிவு, பிரிவு, துண்டு, கட்டி, மிடறு, கழுத்து
கண்டனம் - மறுப்பு
கண்திருஷ்டி-கண்ணேறு, கண்ணெச்சில்
கதம்பம் - கூட்டம், மணப்பொருட் கூட்டு
கநகம் - பொன்
கந்தமூலம் - கிழங்கு
கந்தம் - மணம், நாற்றம்
கந்துகம் - குதிரை, பந்து
கந்மஷம் - அழுக்கு, தீவினை
கந்நிகை-மணமாகாதவள், இளம்பெண்
கபம் - கோழை
கபோதி - குருடன்

கமலம் - தாமரை
கம்பீரம் - செருக்கு, உயர்தோற்றம், பெருமை, ஆழம்
கயரோகம் - எலும்புருக்கிநோய்
கயிலாசம், கயிலாயம்-சிவப்பேறு, நொடித்தான்மலை
கரகோஷம் - கைதட்டுதல்
கருடன் - கலுழன்
கருணை - அருள், இரக்கம்
கருத்தா, கர்த்தா-தலைவன், வினைமுதல், ஆக்கியோன், நூலாசிரியன்
கருமம் - வினை, தொழில்
கர்க்கடகம் - நண்டு
கர்ச்சனை - முழக்கம்
கர்ப்பக்கிரகம் - அகநாழிகை, திருஉள் நாழிகை
கர்ப்பவதி - சூலி
கர்வம் - செருக்கு
கலசம் - குடம்
கலாசாலை - கல்லூரி
கலியாணம் - மணம், மன்றல்
கவி-செய்யுள், பாவலன், பாட்டு,
கவுளி - பல்லி
கனம் - சுமை, பளுவு
காசம்-ஈளைநோய், இருமல்நோய்
காஷாயம் - காவி
காஷ்டம் - விறகு
காயம் - உடல், யாக்கை, வான்
காரகன் - செயபவன்
காரியதரிசி - அமைச்சன், செயலாளன்
காரியஸ்தன் - செயலாளன்
காலக்கிரமம் - கால ஒழுங்கு
காலச்சேபம் - வாழ்க்கை, நாட்கழித்தல்
காளம் - கருமை, முகில்
கிஸ்தி (இந்துஸ்) - திறை
கிஞ்சுகம் - கிளி
கிடாரம் - கொப்பரை
கியாதி - புகழ், மேன்மை
கிரகசாரம் - கோள்நிலை, கோட்சாரம்
கிரகணம் - பற்றுதல், பிடித்தல்
கிரகம் - வீடு, கோள், பற்றுதல், பிடிப்பு
கிரகஸ்தம் - இல்லற நிலை
கிரகித்தல்-பற்றுதல், இழுத்தல், கவர்தல், உணர்தல்
கிரந்தம் - நூல்
கிரமம் - ஒழுங்கு, முறைமை
கிரயம் - விலை
கிராதன் - குறவன், வேட்டுவன்
கிராமம் - சிற்றூர்
கிரியை - தொழில், செயல், வினை, சடங்கு
கிரீடம் - முடி
கிருஷி - பயிர், உழவு, பயிர் செய்கை
கிருஷ்ணபக்ஷம் - தேய்பிறை
கிருபை - அருள், இரக்கம்
கிருமி - பூச்சி, புழு
கிலம் - அழிவு
கிலேசம் - அச்சம், கவலை, துன்பம்
கீணம், க்ஷீணம் - கேடு, சிதைவு
கீதம் - இசை, இசைப்பாட்டு
கீர்த்தி - புகழ், இசை
குக்குடம் - கோழி
குசலம் - நலம், நன்மை
குஞ்சரம் - யானை
குஷ்டம் - தொழுநோய், பெருநோய்
குணம் - இயல்பு
குதூகலம்-பெருங்களிப்பு, பெருமகிழ்ச்சி
குபேரன் - பெருஞ் செல்வன், செல்வக்கடவுள்
குமரி, குமாரி - நங்கை, மணமாகாப் பெண், புதல்வி, மகள்
கும்பகோணம் - குடமூக்கு
கும்பாபிஷேகம் - குடமுழுக்கு

கும்பம் - குடம்
குருபக்தி - ஆசானிடத்தன்பு, குருவினிடத்தன்பு
குரூபி - உருவிலி, அழகிலி
குரூரம் - கொடுமை, அஞ்சாமை தறுகண், ஈரமின்மை
குரோதம் - உட்பகை, சினம்
குலஸ்திரீ - குலமகள்
குன்மம் - சூலை, வயிற்றுவலி
கூசுமாண்டம் - பூசுணி
கூபம் - கிணறு, கூவம்
கூர்மம் -ஆமை
கேலி - பகடி, இகழ்ச்சி
கைங்கரியம் - தொண்டு, பணி
கோஷ்டம் - கூட்டம், மணப்பொருள், பேரொலி
கோஷம் - முழக்கம்
கோஷ்டி - கூட்டம்
கோதண்டம் - வில்
கோத்திரம்-குலம், வகுப்பு, மரபு
கோமயம் - ஆனீர்
கோரம் - கொடுமை, அச்சம்
சகசம் - இயற்கை, ஒற்றுமை
சகடம், சகடு - வண்டி
சகலம் - எல்லாம்
சகலர் - மும்மலக்கட்டினர்
சகவாசம் - கூடவிருத்தல், உடனுறைதல், பழக்கம்,சேர்க்கை, நட்பு
சகன் - தோழன், கூட்டாளி
சகாயம் - உதவி, துணை, நயம், நன்மை, மலிவு, பயன்
சகித்தல் - பொறுத்தல்
சகுனம் - குறி
சகோதரன் - உடன்பிறந்தான், தமையன், தம்பி
சகோதரி - உடன்பிறந்தாள், தமக்கை, தங்கை
சக்கரம் - உருளை, வட்டம்
சேகாரம் - நிலாமுகிப்புள்
சக்கரதரன் - திருமால்
சக்கரவர்த்தி - தனியரசாள்வோன், மன்னர்மன்னன், அரசர்க்கரசன்
சக்தி - ஆற்றல், வல்லமை, வலி
சங்கடம் - நெருக்கம், துன்பம், கேடு, வருத்தம்
சங்கதி - செய்தி
சங்கமம் - ஆறு கடலோடு கூடுமிடம், கூடுகை, இயங்குதிணைப்பொருள், அசைவன
சங்கற்பம் - நினைப்பளவு
சங்காரம் - அழித்தல்
சங்கிராந்தி-திங்கட்பிறப்பு, ஒன்றினின்றும் பிறிதொன்றின்கட் செல்லல்
சங்கீதம் - இசை
சங்கேதம் - குறியீடு, நினைவு
சங்கை - எண், ஐயம், அச்சம்
சங்கோசம் - கூச்சம், வெட்கம் உட்குதல்
சச்சிதானந்தம்-உண்மையறிவின்பம்
சஞ்சலம்-கலக்கம், கவலை, துன்பம், அசைவு
சஞ்சிதம் - ஈட்டியது, எஞ்சியது
சடுதி, சடிதி (இந்துஸ்)-விரைவு
சஷ்டியப்தபூர்த்தி - அறுபதாமாண்டு நிறைவு
சட்சு - கண்
சண்டித்தனம்-முருட்டுத்தன்மை
சதா - எப்பொழுதும்
சதானந்தம் - இடையறுவின்பம்
சதுரம் - அறிவுடைமை,திறமை, நாற்பக்கம்
சத்தம் - ஓசை, ஒலி, சொல், எழு
சத்தியம்-உண்மை, ஆணை, மெய்
சத்திரம் - உணவுச்சாலை, ஊட்டுப்புரை, சாவடி, குடை
சத்துரு - பகைவன்
சத்துவம் - விறல், மெய்ப்படுதல்

சந்ததம் - எப்பொழுதும்
சந்ததி - வழிவழி, பிள்ளை, எச்சம், கால்வழி
சந்தர்ப்பம் - சமயம், அற்றம், நேரம்
சந்தியாவந்தனம் - காலை மாலை வழிபாடு
சந்திரன் - திங்கள், தண்கதிர், நிலவு, மதி, அம்புலி, பிறை
சந்து - முடுக்கு, இயங்கும் உயிர், தூது, பிளப்பு, பொருத்து, இண்டு, மூட்டு
சந்துஷ்டி - மகிழ்ச்சி
சந்தோஷம் - மகிழ்ச்சி, உவகை, களிப்பு
சந்நிதி, சந்நிதானம் - திருமுன்
சந்நியாசம் - துறவு, துறவறம்
சந்நியாசி - துறவி
சபதம் - வஞ்சினம், ஆணை
சபம், ஜெபம் - உருவேற்றல்
சபா, சபை - அவை, மன்றம், கழகம், அரங்கம்
சமஸ்கிருதம் - நன்றாகச்செய்யப் பட்டது, வடமொழி
சமத்தன், சமர்த்தன்-வல்லவன், திறமையாளன்
சமத்துவம் - ஒத்தஉரிமை, ஒன்று படல்
சமயம் - பொழுது, நேரம், காலம்
சமயோசிதம் - காலப்பொருத்தம், தக்கநேரம்
சமரசம் - பொது, வேறுபாடின்மை
சமாசம் - கழகம், கூட்டம்
சமாசாரம் - செய்தி
சமாதானம்-அமைதி, இணக்கம், தணிவு, உடன்பாடு, தக்க விடை
சமாதி - அமைதி, பிணக்குழி, பேசாதிருத்தல், இறப்பு
சமானம் - உவமை, ஒப்பு, இணை
சமிக்ஞை - குறிகாட்டல்
சமீபம்- அருகு, அண்மை, மருங்கு
சமுகம் - நேர், திருமுன்
சமுச்சயம், சம்சயம் - கூட்டம், ஐயம்
சமுதாயம், சமூகம் - கூட்டம்
சமுத்திரம் - கடல்
சமேதம் - கூட இருத்தல்
சம்ஸாரம் - குடும்பம்
சமஸ்கிருதம் - வடமொழி
சம்பத்து - செல்வம்
சம்பந்தம்-உறவு, பற்று, இயைபு, சார்பு, தொடர்பு, பொருத்தம்
சம்பவம் - நிகழ்ச்சி, செயல்
சம்பாஷணை - உரையாடல்
சம்பாதித்தல் - ஈட்டல், தேடல், தொகுத்தல்
சம்பிரதாயம் - தொன்றுதொட்ட வழக்கு, முன்னோர், நடை, பண்டைமுறை
சம்பூரணம் - நிறைவு
சம்மதம் - உடன்பாடு, ஒப்பு
சம்ரக்ஷணை - பாதுகாப்பு
சயனம் - படுக்கை, உறக்கம்
சயம், ஜெயம் - வெற்றி
சயிலம் - மலை
சரசம் - இனிய பண்பு, இனிய விளையாட்டு
சரசுவதி - கலைமகள், நாமகள்
சரணம்-அடைக்கலம், வணக்கம், கால், திருவடி
சரணாகதி - புகலடைதல், அடைக்கலம் புகுதல்
சரணாரவிந்தம் - திருவடித் தாமரை
சரம் - மாலை, அம்பு
சரவணம் - நாணல், பொய்கை
சரிதம், சரித்திரம் - வரலாறு
சரீரம் - உடல், யாக்கை, மெய்
சர்ப்பம் - பாம்பு

சருமம் - தோல்
சருவம் - எல்லாம்
சரோசம் - தாமரை
சர்வகலாசாலை - பல்கலைக்கழகம்
சர்வமானியம் - இறையிலி
சர்வேஸ்வரன் - எப்பொருட்கும் இறைவன்
சலசம் - தாமரை
சலசந்தி - கடலிணைக்கால்
சலசாட்சி - தாமரைக்கண்ணி
சலம், ஜலம் - நீர்
சலதோஷம் - நீர்க்கோவை
சலநம் - அசைவு
சல்லாபம் - உரையாடல்
சவம் - பிணம்
சனம், ஜனம் - மக்கள், நரல்
சனனம், சன்மம் - பிறப்பு
சனி - காரி
சன்மார்க்கம் - நன்னெறி
சன்மானம் - பரிசு
சன்னல் - பலகணி
சாகரம் - கடல்
சாக்கிரதை-விழிப்பு, உன்னிப்பு, எச்சரிக்கை
சாக்கிரம் - நனவு
சாகை - தங்குமிடம், வீடு
சாசனம் - முறி
சாசுவதம் - அழியாமை, அசையாநிலை, உறுதி, வீடுபேறு
சாடி - தாழி
சாட்சி - சான்று, கரி
சாஷ்டாங்கம் - எட்டுறுப்பு
சாதகம் - பயிற்சி, பிறந்தநாட்குறிப்பு, உதவி, காரியங்கைகூடல்
சாதம் - சோறு
சாதனம் - கருவி, இடம், பயிற்சி உறுதிமுறி, அடையாளம், முயற்சி கைகூடல்
சாதாரணம் - பொது
சாதி - இனம், குலம், வகுப்பு,
சாதித்தல் - நிலைநிறுத்தல்
சாதியாசாரம் - குலஒழுக்கம்
சாது - துறவி
சாதுரியம் - திறமை, வன்மை
சாத்திரம் - கலை, நூல்
சாத்மிகம், சாத்துவிகம்-அமைதித் தன்மை
சாந்தம் - அமைதி, பொறுமை
சாந்திரம் - நெருக்கம், திங்கட் டொடர்புடையது
சாபம் - தீமொழி, வசவு, வில்
சாமர்த்தியம்-வல்லமை, திறமை, கூறுபாடு
சாமான் - பொருள்கள், தட்டு முட்டுகள்
சாமி, சுவாமி-கடவுள், தலைவன், அடிகள்
சாமீப்பியம் - சிவனருகிருப்பு
சாயை - நிழல்
சாயுச்சியம் - சிவப்பேறடைவு
சாரதி - வலவன்
சாராம்சம் - சிறந்த பகுதி
சாரீரம் - இனிய குரல், இன்னிசை, உடற்றொடர்பு
சாரூபம் - சிவனுருவம்
சாலோகம் - சிவவுலகு
சாவகாசம் - ஒழிவு, ஓய்வு, வசதி, விரைவின்மை
சாவதானம் - ஒழிவு, ஓய்வு, உன்னிப்பு
சிகரம்-தலை, மலை, உச்சி, முகடு, குவடு
சிகிச்சை, சிகித்சை-மருத்துவம், பரிகாரம்
சிகை - குடுமி, கூந்தல்
சிங்கம், சிம்ஹம் - அரிமா, ஏறு
சிங்காசனம் - அரியணை
சிங்காரம் - ஒப்பனை, திருத்தம், அழகு
சிங்குவை - வாய்
சிசு - குழந்தை, மகவு

சிசுருஷை - பணிவிடை
சிட்சை, சிக்ஷை - கற்பித்தல், கல்வி பயிற்றல், ஒறுத்தல்
சிருட்டி, சிருஷ்டி - படைப்பு
சித்தம் - உள்ளம், நினைவு, கருத்து
சித்தி - பேறு, ஆக்கம்
சித்திரம் - ஓவியம், படம்
சித்திரவதை - வன்கொலை
சிநேகம், சிநேகிதம் - நட்பு, கேண்மை
சிரஞ்சீவி - நீடுவாழ்வோன்
சிரத்தை - அன்பு, முதன்மை, ஊக்கம், உளத்திட்பம், விருப்பு
சிரம பரிகாரம் - துன்ப நீக்கம்
சிரமம் - துன்பம், தொல்லை
சிரவணம் - கேள்வி
சிரார்த்தம் - இறந்தநாட்கடன்
சிருட்டி - படைத்தல்
ஸ்திரீதனம், ஸ்ரீதனம் - மகளுக்குக் கொடுக்கும் கொடை, மகட்கொடை
ஸ்ரீமத் - திருவாளர்
ஸ்ரீலஸ்ரீ - மறைத்திருவாளர்
சிரேஷ்டம் - சிறப்பு
சிரேஷ்டன் - தலைவன், மூத்தோன்
சிலாகித்தல் - புகழ்தல்
சிலாக்கியம் - மேன்மை, நன்மை
சிலேட்டுமம் - சளி, கோழை
சிவிகை - பல்லக்கு
சிற்பம் - கற்றச்சு
சின்னம் - அடையாளம்
சின்னபின்னம் - உருக்குலைவு
சீக்கிரம்-விரைவு, ஒல்லை, கடிது
சீடன் - மாணாக்கன்
சீணதசை-அழிவுகாலம், மழுக்கம்
சீதபேதி - வயிற்றளைச்சல்
சீதம், சீதளம் - குளிர்ச்சி
சீதோஷ்ணம் - தட்பவெப்பம்
சீமந்தம் - சூல்காப்பிடுஞ்சடங்கு
சீமந்த புத்திரன் - தலைமகன்
சீமந்தினி - பெண்மகள்
சீரணம் - செரித்தல், பழுது
சீர்ணோத்தாரணம் - பழுது பார்த்தல்
சீலம் - ஒழுக்கம்
சீவசெந்து - உயிர்ப்பொருள்
சீவகாருண்ணியம் - உயிர்களிடத் தன்பு, அருள் ஒழுக்கம்
சீவனம் - பிழைப்பு
சீவியம் - வாழ்நாள், பிழைப்பு, வாழ்க்கை
சுகந்தம் - நறுமணம்
சுகம் - நலம், இன்பம்
சுகாதாரம் - நலவழி
சுகிர்தம் - நன்மை
சுக்கிரவாரம் - வெள்ளிக்கிழமை
சுக்கிலபக்ஷம் - வளர்பிறை
சுக்கிலம்-வெண்ணீர், வெண்மை
சுதந்திரம் - உரிமை
சுதேசம் - தாய்நாடு
சுத்தம் - தூய்மை, துப்புரவு
சுந்தரம் - அழகு
சுபாவம் - தன்மை, இயற்கை, இயல்பு
சுயபாஷை - தாய்மொழி
சுபிக்ஷம் - செழிப்பு
சுயம்வரம் - தான் விரும்பும் மணம்
சுயார்ச்சிதம் - தான் தேடிய பொருள்
சுயேச்சை - தன் விருப்பம்
சுரஸம் - முறித்த சாறு
சுரம் - காய்ச்சல், வெப்புநோய்
சுருதி - குரல்
சுலபம் - எளிது
சுவதந்திரம் - உரிமை
சுவர்க்கம் - துறக்கம், பேரின்ப வீடு
சுவர்ணம் - பொன்
சுவாசகாசம் - இளைப்பிருமல்
சுவாசம் - மூச்சு, உயிர்ப்பு
சுவாதிஷ்டானம் - கொப்பூழ்

சுவீகாரம் - தனதாக்குதல்
சுவேதம் - வெண்மை
சுழுத்தி - உறக்கம்
சூக்குமம் - நுண்மை, அணு
சூசிகை - ஊசி, யானைத் துதிக்கை
சூதகம் - தீட்டு
சூரணம் - தூள்
சூரியன் - ஞாயிறு, பகலவன், கதிரவன், பரிதி, என்றூழ், கனலி, எல்லோன், வெயிலோன், வெய்யோன்
சூலம் - வேல்
சூன்யம் - பாழ், இன்மை, இல் பொருள்
சேஷம் - எச்சில், மிச்சம்
சேஷ்டன் - தமையன், மூத்தோன்
சேஷ்டை - குறும்பு, தமக்கை, அக்காள்
சேத்திரம் - திருக்கோயில், திருப்பதி
சேமம் - நலம், காவல், புதையல்
சேவகன் - காவற்காரன், போர் மறவன்
சேவித்தல் - தொழுதல், வணங்கல்
சேனாதிபதி - படைத்தலைவன், சேனைத்தலைவன்
சைந்யம் - படை
சைலம் - மலை
சோஸ்தம் - நலம், குணம்
சொப்பனம் - கனவு
சோதரன் - உடன்பிறந்தான்
சோதனை - ஆராய்ச்சி, ஆய்வு, தேர்வு
சோதி, ஜோதி - ஒளிவிளக்கம்
சோதிடர், சோசியர் - கோள் நூலார், காலக்கணிதர், குறிப்பாளர்
சோத்திரம் - செவி
சோபித்தல் - ஒளிர்தல், விளங்கல்
சோமன் - திங்கள், மதி
சோமவாரம் - திங்கட்கிழமை
சோலி(தெலு)-வேலை, தொழில்
சௌகரியம் - நலம், எளிது
சௌக்கியம் - நலம், மகிழ்ச்சி
சௌஜன்யம் - நல்லிணக்கம்
சௌந்தரம் - அழகு
சௌபாக்கியவதி - செல்வி, திருமகள்
சௌரமானம், சூரியமானம் - பகல் வழியளவு
ஞாதி - சுற்றம்
ஞானம் - அறிவு, கல்வி, மெய்யுணர்வு, அருளறிவு
ஞாபகம் - நினைவு
தகனம் - எரித்தல், சுடுதல்
தக்கணம் - உடன், தெற்கு
தசாவதாரம் - பத்துப் பிறப்பு
தசை, தசா - ஊன், புலால்
தட்சிணாமூர்த்தம் - குருவடிவம், தென்முகக் கடவுள்
தட்சிணை, தக்கணை - காணிக்கை
தண்டனை - ஒறுப்பு, ஆணை, கட்டளை
ததாஸ்து - அப்படியேயாகட்டும்
ததியோதனம் - தயிர்ச்சோறு
தத்தம் - கொடுத்தல், ஈகை
தத்துவம் - உண்மை, மெய், பொருளியல் உண்மை
தநம், தனம் - செல்வம், பொருள், கொங்கை
தனவான் - செல்வன்
தந்தம் - பல்
தந்தி - கம்பி, மின்செய்தி, ஆண் யானை
தந்திரம் - சூழ்ச்சி, நூல்
தபசு, தவசு - தவம்
தபால் (இந்துஸ்) - அஞ்சல்
தமரகம் - உடுக்கை
தமாஷ் (இந்துஸ்) - பகடி, விளையாட்டு

தம்பதி - கணவனும் மனைவியும்
தம்பம், ஸ்தம்பம் - தூண்
தயவு, தயா, தயை - அன்பு, இரக்கம், கண்ணோட்டம்
தயிலம் - எண்ணெய்
தரா - நிலம், வையகம்
தராசு, திராசு - துலாக்கோல், நிறைகோல்
தரிசனம் - காட்சி, பார்வை, கண்
தரித்தல் - அணிதல், பூணல், உடுத்தல், மேற்கொள்ளல்
தரித்திரம் - வறுமை, எளிமை, நல்குரவு, மிடி, இன்மை
தருக்கம் - அளவை, அளவைநூல்
தருணம் - வேளை, பொழுது
தருமம் - அறம்
தலம், ஸ்தலம் - இடம், கோயில், பதி
தலயாத்திரை - திருக்கோயிற் பயணம், திருக்கோயிற் செலவு
தற்சமயம் - இப்பொழுது, இவ்வேளை
தாகம் - விடாய், நீர்வேட்கை
தாசன் - அடியான், அடிமை
தாட்சணியம் - கண்ணோட்டம்
தானம், ஸ்தானம் - இடம், இருக்கை
தாபரம், தாவரம் - நிலையியற் பொருள், நிற்பன, அசையாப் பொருள்
தாபித்தல் - நிறுவுதல், நாட்டல், நிலைநிறுத்தல்
தாமசம், தாமதம் - தாழ்த்தல், அட்டி, மயல்
தாமம் - கயிறு, மாலை
தாம்பரபரணி - பொருநை
தாரதம்மியம் - ஏற்றத்தாழ்வு
தாற்பரியம - கருத்துரை
தானம் - ஈகை, கொடை
தானியம் - கூலம்
திடம் - வன்மை, உறுதி

திட்டி, திருட்டி - கண், பார்வை, கண்ணேறு
திதி - காத்தல்
திநம், தினம் - நாள், ஞான்று
தியாகம் - கொடை
தியானித்தல் - நினைத்தல், வழிபடல்
திரம், ஸ்திரம் - நிலை, உறுதி
திரயம் - மூன்று
திரவியம் - பொருள், செல்வம்
திராவகம் - செய்நீர், சாரம்
திராட்சை - கொடிமுந்திரி
திரி, ஸ்திரீ - பெண்
திருட்டாந்தம்-சான்று, எடுத்துக்காட்டு, மேற்கோள்
திருத்தி, திருப்தி - மனநிறைவு, அமைவு, சால்வு
திரோபவம் - மறைத்தல்
திலகம் - பொட்டு
திவ்வியம் - நேர்த்தி, இனிமை, மேன்மை
தினசரி - நாடோறும்
தீபஸ்தம்பம் - விளக்குத் தண்டு, கலங்கரை விளக்கம்
தீபாராதனை-ஒளியால்வழிபடுகை
தீரம் - கரை
தீரன் - திண்ணியன், ஆண்டகை, திறனுளான்
தீர்க்கதரிசி - முக்கால வுணர்வினன், மெய்க்காட்சியாளன்
தீர்க்கம் - தெளிவு
தீர்த்தம் - புனிதநீர், திருக்குளம்
தீவாந்தரம் - தீவு, வெளி
தீவிரம் - விரைவு
துக்கம் - துன்பம், பரிவு, கவலை, வருத்தம், துயரம்
துஷ்டன் - தீயவன், பட்டி, வம்பன்
துதி, ஸ்துதி - வணக்கம், வழுத்துரை
துரிதம் - விரைவு

துரியம் - பேருறக்கம்
துரியாதீதம் - உயிர்ப்படக்கம்
துரோகம்-இரண்டகம், வஞ்சனை
துவசம் - கொடி
துவாரம் - வாயில், புழை, துளை,
துவேஷம் - பகை, வெறுப்பு
தூஷணை - இகழ்ச்சி, பழி, பழிச்சொல்
தூதர் - ஒற்றர், வேவுகாரர்
தூபம் - புகை
தூபி, ஸ்தூபி - முடி (கோயில் முதலியவற்றின் முடி)
தூரதிருஷ்டிக் கண்ணுடி-தொலை நோக்காடி
தூரம் - சேய்மை, தொலைவு, எட்டாக் கை
தூலம் - பருமை
தேகம் - உடல், யாக்கை, மெய்
தேகவியோகம் - சாக்காடு
தேகாப்பியாசம் - உடற்பயிற்சி
தேசசு - ஒளி
தேசம் - நாடு
தேயு - அனல்
தேவபக்தி, தெய்வபக்தி - கடவுட் பற்று, கடவுளிடத்தன்பு, தெய்வநேயம்
தேவன் - இறைவன், தலைவன்
தேவஸ்தானம்-கடவுள் நிலையம், கோயில்
தேவாதீனம் - கடவுட்செயல்
தேவி - இறைவி, அரசி, தலைவி
தைரியம் - உறுதி, திட்பம், ஆண்மை, ஊக்கம்
தைலம் - எண்ணெய்
தொக்கு - மெய்
தோடம், தோஷம் - குற்றம்
தோத்திரம் - வாழ்த்து, வழுத்து
நகல் (அராபி) - படி
நகுலம் - கீரி
நடராஜமூர்த்தி, நடராஜன்-கூத்தன், அம்பலவாணன்
நட்சத்திரம் - மீன், வெள்ளி, நாள்
நட்டம், நஷ்டம் - கேடு, இழப்பு
நதி - ஆறு, யாறு
நந்தர் - இடையர்
நந்தவனம், நந்தனவனம் - பூந்தோட்டம், பூங்கா
நபர் (அராபி) - ஆள்
நமஸ்காரம் - வணக்கம்
நயம் - நன்மை
நயனம் - கண்
நரகம் - நிரயம், அளறு
நரன் - மனிதன்
நர்த்தனம் - கூத்து
நவக்கிரகம் - ஒன்பது கோள்
நவதானியம் - ஒன்பது வகைத் தவசம்
நவநீதம் - வெண்ணெய்
நவீனம் - புதுமை
நாகம் - பாம்பு
நாசம் - அழிவு, கேடு
நாசி - மூக்கு
நாஸ்திகன் - தெய்வமில் கொள்கையான்
நாதம் - ஒலி, ஓசை, செம்பால், செந்நீர்
நாதன் - தலைவன்
நாநாவிதம் - பலவகை
நாபிதன், நாவிதன் - மயிர்வினைஞன்
நாமம் - பெயர்
நாயகன் - தலைவன்
நாயகி - தலைவி
நாராசம் - இருப்பாணி
நாரிகேளம் - தேங்காய்
நிக்கிரகம் - அழிக்கை, ஒழிப்பு
நிசம் - உண்மை, மெய்
நிசி - இரவு
நிச்சயம் - உறுதி, மெய், துணிவு, திண்ணம், தேற்றம்
நிஷ்டூரம் - கொடுமை

நிதரிசனம் - கண்கூடு
நிதானம் - மதிப்பு
நிதி-செல்வம், வைப்பு, பொருள்
நித்தியம் - நாடோறும், எப்பொழுதும், அழியாமை
நித்திரை - தூக்கம், துயில், உறக்கம், கண்படை
நிந்தனை - இகழ்ச்சி, பழிப்பு
நிபந்தனை - கட்டுப்பாடு, உறுதி, ஏற்பாடு
நிபுணர் - தேர்ந்தவர், வல்லவர்
நிமிஷம் - நொடிப்பொழுது, நொடி
நிமித்தம் - குறி, காரணம், பொருட்டு, அடையாளம்
நியதி - ஊழ்,செய்கடன், முறை, ஒழுங்கு, பிறழா நிகழ்ச்சி
நியமம் - ஒழுங்கு, முறை, நெறி, நாட்கடன்
நியமனம் - கட்டளை, ஒழுங்கு
நியமித்தல் - அமைத்தல், ஏற்படுத்தல்
நியாயம் - நெறி, முறை, நடுநிலை
நியாயாதிபதி - முறைமன்றத் தலைவர், நடுவர்
நிருணயம் - உறுதி
நிரூபித்தல் - மெய்ப்பித்தல், நிலைபெறுத்தல்
நிருமூலம் - அடியற்றது, அழிவு, வேரோடு கல்லல்
நிருவாகம் - கொண்டு நடத்தல், பொறுப்பு
நிருவாணம் - உடையின்மை, முண்டம், பற்றின்மை
நிர்ப்பந்தம்-நெருக்கம், தொல்லை, இடர், வலுகட்டாயம்
நிவர்த்தி,நிவிர்த்தி-விடுதலை, நீக்கம்
நீசன் - கீழ்மகன், தாழ்ந்தோன்
நீதி - நெறி, முறை, அறம்
நீதிஸ்தலம் - முறைமன்றம்
நூதனம் - புதுமை
நேத்திரம் - கண்
பகவன், பகவான் - கடவுள், பெருமான்
பகிஷ்காரம் - விலக்கு
பகிரங்கம் - வெளிப்படை
பக்குவம் - தகுதி, நிலை
பங்கஜம் - தாமரை, முளரி
பங்கம் - குறை, பழுது, சேறு, குற்றம்
பசார் (பார்சி) - சந்தை, அங்காடி
பசு - ஆ, உயிர்
பச்சாத்தாபம் - கண்ணோட்டம், கழிவிரக்கம்
பஞ்சபாதகன் - ஐம்பெருங்குற்றத்தான்
பஞ்சாட்சரம் - ஐந்தெழுத்து
பட்சணம் - தின்பண்டம்
பட்சம் - உருக்கம், அன்பு
பட்சி - பறவை, புள்
பட்டாபிஷேகம் - முடிசூட்டல்
பண்டிகை - பெருநாள்,திருவிழா
பண்டிதன் - புலவன், அறிஞன், மருத்துவன்
பதட்டம் - பதறுதல், விரைதல், அஞ்சல்
பதம் - சொல், விலை
பதார்த்தம் - சொற்பொருள், பொருள்
பதி - கடவுள்
பதிவிரதை - கற்பரசி
பதுமாவதி, பத்மாசனி - திருமகள்
பத்தர் - அன்பர், தொண்டர்
பத்தி, பக்தி-அன்பு, நேயம்,பற்று
பத்தியம் - மருந்துணா, செய்யுள்
பத்திரம் - இலை, ஆவணம்
பத்திரிகை - செய்தித்தாள், செய்தி இதழ்
பந்தம் - உறவு, தொடர்பு, கட்டு
பந்தி - வரிசை, தொகுதி
பயங்கரம் - கொடுமை, அச்சம்
பயம் - அச்சம்

பரஸ்பரம் - ஒருவர்க்கொருவர்
பரதேசம் - பிறர்நாடு
பரமகதி - வீடுபேறு, மேல்நிலை
பரம்பரை - கால்வழி, தலைமுறை
பரவசம் - தன்னுணர்வின்மை
பராக்கிரமசாலி - ஆண்டகை
பரிகாசம் - பகடி, எள்ளனம்
பரிசம் - ஊறு
பரிசுத்தம் - தூய்மை, துப்புரவு, மாசின்மை, புனிதம்
பரிதாபம் - இரக்கம்
பரிமாணம் - அளவு
பரிமிதம் - அளவுபட்டது
பரீட்சை - தேர்வு
பருவதம், பர்வதம் - மலை
பரோபகாரம் - உதவி, கைம்மாறு கருதா உதவி
பர்த்தா - கணவன்
பலஹீனம் - வலுக்குறைவு
பலம் - பழம், வலிவு
பலன் - பயன்
பலாத்காரம், பலவந்தம் - வலுகட்டாயம்
பலி - இரை, காணிக்கை, வேள்வி, கடவுளுணு, ஒப்புவித்தல்
பலித்தல் - கைகூடுதல், பயன் றருதல்
பவனம் - வீடு
பாக்கியம் - பேறு, செல்வம், நல்வினை
பாசம் - தளை, கட்டு, கயிறு, அன்பு
பாஷை - மொழி
பாடாணம் - நஞ்சு
பாடியம், பாஷியம் - அகலவுரை, விரிவுரை, பேருரை
பாணி - கை
பாதகம் - தீமை
பாதம் - தாள், கால், அடி
பாதரட்சை - காற்பரடு, மிதியடி
பாதை - வழி, பாட்டை
பாத்தியம் - உரிமை
பாத்திரம் - ஏனம், கலம், தகுதி உரிமை
பானகம் - பருகுநீர், குடிநீர்
பாபமோசனம் - தீவினைநீக்கம்
பாபி - தீயோன்
பாயுரு - எருவாய்
பாரம் - சுமை, பொறை, கடமை
பாரியா, பாரியை - மனைவி
பார்வதி - மலைமகள்
பாலகன் - குழந்தை
பாலப்பருவம் - பிள்ளைப்பருவம்
பால்யர் - இளைஞர்
பாவனை - கற்பனை, ஒப்பு, எண்ணம், நினைப்பு
பாஸ்கரன் - பகலோன்
பிங்கலை - வலதுமூச்சு
பிசாசு - பேய், அலகை
பிச்சை, பிட்சை - இரப்பு, ஐயம்
பிச்சைக்காரன் - இரப்போன்
பிஞ்ஞகம் - தலைக்கோலம்
பிடிவாதம் - விடாப்பிடி
பிதா - தந்தை, தகப்பன், அத்தன்
பிதிரார்ச்சிதம் - முன்னோர் தேட்டம்
பிதிர்க்கடன் - மூதாட்கள் கடன், தென்புலத்தார் கடன்
பினாகம் - வில்
பிந்நம் - சிதைவு, வேறுபாடு
பிரகடனம் - விளம்பரம்
பிரகதாம்பாள் - பெரியநாயகி
பிரகஸ்பதி - வியாழன்
பிரகாசம் - ஒளி, துலக்கம், வெளிச்சம்
பிரகிருதி - இயற்கை, பகுதி
பிரக்ஞை - உணர்வு
பிரசங்கம் - விரிவுரை, சொற்பொழிவு
பிரசண்டமாருதம் - பெரும்புயல், பெருங்காற்று
பிரசவம் - பிள்ளைப்பேறு, கருவுயிர்ப்பு

பிரசாதம் - கடவுளுணு, தேவுணு, படைப்பு, அருள்
பிரசாரம் - பரப்புதல்
பிரசித்தி - வெளிப்படை, அறிவிப்பு, புகழ்பரவல்
பிரசுரம் - வெளியீடு
பிரதட்சிணம் - வலம்வருதல்
பிரணவம் - ஓங்காரம்
பிரதானம் - முதன்மை, சிறப்பு
பிரதி - படி
பிரதிகூலம் - மாறபாடு, எதிர்
பிரதிக்கினை - உறுதி, ஆணை, மேற்கோள்
பிரதிஷ்டை - நிலைபெறுத்தல், கோயில் கொள்ளுவித்தல்
பிரதிதினம் - நாடோறும், ஒவ்வொரு நாளும்
பிரதிநிதி - ஆணையாளர்
பிரதியுபகாரம் - கைம்மாறு
பிரதிவாதி - எதிர் வழக்காளி
பிரதேசம் - இடம்
பிரத்தாபம்-அறிவித்தல், வெளிப்படுத்தல்
பிரத்தியக்ஷம் - கண்கூடு, தெளிவு
பிரத்தியேகம் - தனிமை
பிரபஞ்சம் - உலகம்
பிரபந்தம் - நூல், நூற்றொகுதி
பிரபல்லியம் - புகழ், முதன்மை, சிறப்பு
பிரபாவம் - புகழ், பெருமை
பிரபு - பெருந்தகை, பெருஞ் செல்வன், தலைவன்
பிரமசாரி - மணமாகாதவன்
பிரமா - நான்முகன்
பிரமாணம் - அளவை, தலைமை, மேற்கோள், ஆணை, கட்டளை
பிரமாண்டம் - பேருலகம்
பிரமாதம் - மிகுதி
பிரமானந்தம் - பேரின்பம்
பிரமித்தல்-மலைத்தல், திகைத்தல், மருளல்
பிரமேயம் - அளக்கப்படும் பொருள்
பிரமை - மயக்கம், அறியாமை
பிரமோற்சவம் - பெருவிழா
பிரயத்தனம் - முயற்சி
பிரயாசை - முயற்சி, வருத்தம், பாடு, உழைப்பு, தொல்லை
பிரயாணம் - பயணம், வழிப்போக்கு, வழிச்செலவு, செலவு
பிரயோசனம் - பயன்
பிரலாபம் - புலம்பல்
பிரவர்த்தி - முயற்சி, செய்கை
பிரவாகம் - வெள்ளப்பெருக்கு
பிரவேசம் - நுழைவு, முயற்சி
பிரளயம் - அழிவுகாலம், உலக ஒடுக்கம், வெள்ளம்
பிரளயாகலர் - இருமலக்கட்டினர்
பிராகாரம் - கோயிற்சுற்று
பிராகாமியம் - நிறைவுண்மை
பிராணவாயு - உயிர்க்காற்று, உயிர்வளி, உயிர்ப்பு
பிராணி - உயிரி, சிற்றுயிர்
பிராது (அராபி) - முறையீடு, முறைப்பாடு
பிராப்தம் - ஊழ்வினை
பிராப்தி - விரும்பியதெய்தல்
பிராமணன் - பார்ப்பான்
பிரார்த்தனை - நேர்த்திக்கடன், வேண்டுகோள்
பிரியம் - அன்பு, விருப்பம்
பிரீதி - அன்பு, உருக்கம், அவா
பிருதிவி - மண்
பிரேதம் - பிணம்
பிரேரேபித்தல் - முன்மொழிதல்
பீசம் - முளை, விதை
பீடம் - இருக்கை, மேடை
பீடை - துன்பம், பீழை, நோய்
பீதாம்பரம் - பொற்பட்டாடை
புஸ்தகம், புத்தகம் - சுவடி, நூல்
புஷ்டி - பருமன், தடிப்பு
புட்பம், புஷ்பம் - பூ, மலர்

புட்பராகம் - வெள்ளைக்கல்
புட்பவதி - பூப்பானவள்
புண்ணிய திநம் - நன்னாள்
புண்ணிய பாவம் - நல்வினை தீவினை, அறம் மறம்
புதன் - அறிவன்
புத்தி - உணர்ச்சி, அறிவு
புத்திரன் - புதல்வன், மகன், மைந்தன், கான்முளை
புத்திரி - புதல்வி, மகள்
புயபலம், புஜபலம் - தோள்வலி
புராணம் - பழங்கதை, பழைய வரலாறு
புராதனம் - பழமை, தொன்மை
புருடன் - ஆண்மகன், கணவன்
புருடார்த்தம் - உறுதிப்பொருள்
புரோகிதன்-வேள்வி செய்வோன்
புவனி, புவி - இடம்
புனர்ப்பாகம் - சோற்றின் மறுபால், தெளு
பூகம்பம் - நில நடுக்கம்
பூகோள சாஸ்திரம் - நிலநூல்
பூசாரி - வழிபாடு செய்வோன்
பூசை - வழிபாடு, வணக்கம்
பூஷணம் - அணிகலன், அணி
பூச்சியம் - இன்மை, அருமை
பூதம் - முதற்பொருள், முதல், புலன், பேய்
பூமி - நிலம், உலகு
பூரணம் - நிறைவு, எல்லாம்
பூரித்தல் - நிறைதல்
பூர்த்தி - முடிவு, நிறைவு
பூர்வ சென்மம் - முன்பிறப்பு
பூர்வபக்ஷம் - வளர்பிறை
பூர்விகம் - பழைமை
பேதம் - ஒவ்வாமை, வேற்றுமை, வேறுபாடு
பைத்தியம் - பித்து, வெறி, கோட்டி
போக்கிஷம் (தெலு) - பொருட்களஞ்சியம்
பொக்கிஷ சாலை - கருவூலம்
போகம் - இன்பம், துய்ப்பு, நுகர்பொருள்
போசனம் - உணவு, சோறு, உண்டி, ஊண்
போஷகர் - ஊட்டகர்
போஷணை - நுகர்பொருள்
போதனை - கற்பனை
போதை - வெறி, மயக்கம்
போநகம் - சோறு, உணவு
பௌதிகசாஸ்திரம் - இயற்கைப் பொருள் நூல்
பௌத்திரன் - பேரன்
பௌத்திரி - பேர்த்தி
பௌர்ணமி, பூரணை - முழுநிலா
பௌவம் - கடல்
மகத்துவம் - மேன்மை
மகாராசன் - அரசன், செல்வன்
மகா - பெரிய, மிகுதி, மேன்மை
மகாத்மா - பெரியோன்
மகிமா - பருமை
மகிமை - பெருமை, மேன்மை
மகுடம் - தலையணி, முடி
மசானம், மயாநம் - சுடுகாடு
மச்சம் - மீன்
மணிபூரகம் - மேல் வயிறு
மண்டூகம் - தவளை
மதம் - கொழுப்பு, கொள்கை
மது - கள், தேன்
மதுகரம் - வண்டு
மத்திபம், மத்திமம் - நடுநிலை, நடு
மத்தியானம் - நண்பகல்
மநசு - உள்ளம், மனம்
மநஸ்தாபம் - துன்பம், மனவருத்தம்
மநநம் - இடையறா நினைவு
மநப்பூர்வம் - முழுமனது
மநோகரம் - உள்ளக்கவர்ச்சி, இனிமை
மநோராச்சியம் - மனக்கோட்டை, வீண் எண்ணம்

மந்தம் - செரியாமை, சோம்பல்
மந்தாரம் - மப்பு, மழைவானம்
மந்திரம் - மறைமொழி
மந்திரி - அமைச்சன்
மமகாரம் - எனதென்றல்
மரணபரியந்தம் - இறக்குமளவும்
மரணம்-சாவு, இறப்பு, சாக்காடு
மரணே, ஸ்மரணே - நினைவு, உணர்ச்சி
மாகுல் (இந்துஸ்) - விளைவு
மாதம் - திங்கள்
மாதா - தாய், அன்னை
மாதாந்தம் - திங்களிறுதி
மாத்சரியம், மாற்சரியம் - பகைமை, பொறாமை
மாத்திரம் - மட்டும்
மாத்திரை - அளவு
மானபங்கம்-பெருமைக் குறைவு, மானக்கேடு
மானியம் - இறையிலிநிலம்
மாந்தம் - செரியாமை
மாமிசபட்சணம் - ஊனுண
மாமிசம்-இறைச்சி. ஊன், புலால்
மார்க்கம் - வழி, நெறி
மாலுமி - மீகாமன்
மிசிரம் - கலப்பு
மிதம் - அளவு, மட்டு
மித்திரன், மித்துரு-நட்பு, நண்பு
மிருகம் - விலங்கு
மிருதங்கம் - மத்தளம்
மிருது - மென்மை, நொய்மை
மிலேச்சன் - அறிவிலான், வேடன்
மீனாட்சி - கயற்கண்ணி
முகஸ்துதி - முகமன்
முகூர்த்தம் - முழுத்தம், நல்
முக்கியம் - முதன்மை [வேளை
முத்தி - வீடுபேறு
முத்திரை-அடையாளம், பொறி
மூடர் - அறிவிலார்
மூடிகம், மூஷிகம் - பெருச்சாளி
மூர்க்கன்-அறிவிலான், முருடன்
மூர்ச்சை - அறிவு மயக்கம், களைப்பு, உணர்ச்சியின்மை
மூர்த்தி - கடவுள்
மூலதனம் - முதற்பொருள், விடுமுதல்
மேகம் - முகில், எழிலி, வான்
மேடம் - ஆடு
மோகம் - அவா, மயக்கம், பெருவேட்கை, விருப்பம், மருள்
மோட்சம் - வீடு, துறக்கம்
மௌட்டியம் - அறியாமை
மௌனம் - அடக்கம், பேசாமை
யசமானன் - தலைவன்
யதார்த்தம் - மெய், உண்மை
யதேச்சை - விருப்பம், இயற்கை
யதேஷ்டம் - மிகுதி
யத்தனம் - முயற்சி
யாகம் - வேள்வி
யாசகம் - இரப்பு
யாதவன் - இடையன்
யாத்திரை - வழிச்செலவு, வழிப்பயணம், ஊர்ப்பயணம்
யுகம் - ஊழி
யுத்தகளம் - போர்முனை, அமர்க்களம்
யுத்தி, யுக்தி-சூழ்ச்சி, பொருந்துமாறு
யூகம் - நுண்ணறிவு, சூழ்ச்சி, கருங் குரங்கு
யோகக்ஷேமம் - நலச் செய்தி
யோகம் - தவநிலை, ஒன்றுதல், மனவொருக்கம், நல்வினை
யோக்கியம், யோக்கியதை - தகுதி
யோசனை - ஓர்வு, ஆராய்ச்சி, சூழ்ச்சி
ரசம் - சுவை
ரசா, ரஜா - விடுமுறை, ஓய்வு
ரசீது - பற்றுமுறி
ரஸ்தா - பெரிய தெரு, பாட்டை

ரணம் - போர், புண்
ருசுப்படுத்தல்-மெய்ப்பித்தல் [டு
ருதுமங்களஸ்நானம்-பூப்புநீராட்
ரூபம் - வடிவு, உருவம்
லகித்தல் - பொறுத்தல், பூணல், ஏற்றல்
வக்கிரம் - வளைவு
வசனம் - உரைநடை
வசந்தம்-தென்றற்காற்று, மணம்
வசித்தல் - உறைதல், வாழ்தல்
வசியம், வசீகரம் - கவர்ச்சி
வச்சிரம் - உறுதியானது
வஸ்திரம்-ஆடை, துணி, கூறை
வஸ்து - பொருள்
வண்ணம், வர்ணம்-நிறம், எழில், அழகு
வதனம் - முகம்
வதந்தி - பேச்சு, பலரறிசொல்
வதுவை - மணம், மணப்பெண்
வதூ - பெண்
வனபோசனம் - சோலையுணு
வனம் - காடு, தோப்பு
வனவாசம் - காடுறை வாழ்க்கை
வந்தனம் - வணக்கம், வழிபாடு
வந்தனோபசாரம் - வணக்கவுரை
வமிசம், வம்சம் - கால்வழி, பரம்பரை, தலைமுறை
வயசு, வயது - ஆண்டு, அகவை
வயம் - அதுவாதல், வழி
வயிரம் - கூர்மை, ஒளிமணிக் கல், காழ்ப்பு
வயோதிகம் - முதுமை
வரம் - பேறு, மேன்மை, அருள்
வருக்கம், வர்க்கம் - இனம், வகுப்பு, ஒழுங்கு
வருடம் - ஆண்டு
வருணம் - நிறம், குலம்
வருணனை - ஒப்பனை
வர்த்தமானம் - செய்தி
வல்லபம்-வலிமை, ஆற்றல், திறம்
வாகனம்-ஊர்தி, அணிகம்
வாக்கியம் - சொற்றொடர்
வாக்கு-வாயுரை, சொல், மொழி
வாக்குத்தத்தம்-உறுதிமொழி
வாக்குமூலம் - உறுதிச்சொல்
வாசகம் - சொல்
வாசம் - மணம், இருப்பு.
வாசனை - மணம்
வாஞ்சை - விருப்பம், அவா
வாதம் - காற்று, குளிர்ச்சி, காற்றுப்பிடிப்பு, வழக்கு
வாதனை - துன்பம், வருத்தம்
வாதித்தல் - வழக்கிடுதல்
வாத்சல்யம் - அன்பு, விருப்பம்
வாத்தியம் - இசைக்கருவி
வானரம் - குரங்கு
வாந்தி - வாயாலெடுப்பு, கக்கல்
வாந்தி பேதி - கக்கற் கழிச்சல்
வாமம் - அழகு, இடப்பக்கம்
வாயு - கால், காற்று
வாரம் - கிழமை, அன்பு
வாராவதி - பாலம்
வார்த்தை - சொல்
வாலிபம் - இளமை
விகடன் - பகடி, வேடிக்கை
விகற்பம், விகாரம் - வேறுபாடு
விகாரம்-அழகின்மை, வேறுபாடு
விகிதம்-நேயம், நட்பு, விழுக்காடு
விக்கிரகம்-உருவம், பருப்பொருளுரு
விக்கினம் - இடையூறு, தீங்கு
விஜயம் - வெற்றி, எழுந்தருளல்
விசாரணை - ஆராய்ச்சி, கேள்வி
விசாரம் - கவலை, எண்ணம்
விசாலம், விஸ்தீரணம் - விரிவு, அகலம், பெருக்கம்
விசித்திரம்-வியப்பு, புதுமை
விசுவாசம் - நம்பிக்கை, உண்மை
விசேடம்-மேன்மை, சிறப்பு
விச்சை, வித்தை - அறிவு
விஞ்ஞாபனம் - விண்ணப்பம், முறையீடு, வேண்டுகோள்

விஞ்ஞானகலர் - ஒருமலக்கட்டினர்
விடம், விஷம் - நஞ்சு
விடயம், விஷயம் - பொருள், நுதலிய பொருள்
விட்டுணு, விஷ்ணு - திருமால்
விதண்டாவாதம் - அழிவழக்கு
விதந்து, விதவை - கைம்பெண், அறுதாலி
விதம் - வகை, ஆறு, வழி
விதி - ஊழ், தெய்வம், முறை, செயற்கை, கட்டளை
விதேயன் - பணிவுள்ளவன்
விஸ்தாரம் - விரிவு
வித்தியாசம் - வேறுபாடு, ஏற்றத் தாழ்வு, வேற்றுமை
வித்துவான் - புலவன்
விந்து - ஒலிமுதல்
விநயம் - வணக்கம், அறிவு
விநாயகர் - பிள்ளையார்
விநாயகர் சதுர்த்தி - பிள்ளையார் நோன்பு
விந்தை, விநோதம் - புதுமை
விபத்து - இக்கட்டு, இடையூறு
விபரீதம் - வேறுபாடு, திரிபு
விபூதி - திருநீறு, நீறு
விமோசநம் - நீக்கம், விடுதலை
வியபிசாரி - ஒழுக்கமிலாள்
வியவகாரம் - வழக்கு
வியாக்கியாநம் - விரிவுரை
வியாசம் - கட்டுரை
வியாச்சியம் - வழக்கு
வியாஜம் - தலைக்கீடு
வியாதி - நோய், பிணி
வியாபாரம்-வாணிபம், கொண்டு விற்றல், பண்டமாற்று
விரதம் - நோன்பு, தவம்
விருச்சிகம் - தேள்
விருட்சம் - மரம்
விருத்தன்-கிழவன், முதியோன்
விருத்தாசலம் - பழமலை
விருத்தாந்தம் - வரலாறு
விருத்தி - ஆக்கம், பெருக்கம்
விரோதம் - பகை, முரண், மாறுபாடு
விலாசம் - முகவரி
விவகாரம் - வாய்பாடு, வழக்கு
விவசாயம் - பயிர்த்தொழில், உழவு தொழில், வேளாண்மை
விவரணம் - விளக்கம்
விவாகம் - திருமணம், மன்றல்
விவாதம் - வழக்கு
விவேகம் - பகுத்தறிவு, அறிவு
வீதம், விகிதம் - விழுக்காடு
வீதி - தெரு
வீரர் - மள்ளர், மறவர்
வீரியம் - மறம்; ஆண்மை
வெகுமானம் - பரிசு, கொடை
வேகம் - விரைவு
வேடம், வேஷம் - கோலம்
வேதம் - மறை
வேதனம் - கூலி
வேதனை - துன்பம்
வேதாந்தம் - மறைமுடிவு
வேதாரண்யம் - மறைக்காடு
வேதியர் - அந்தணர், பார்ப்பார்
வைகுண்டம் - திருமாலுலகு
வைசூரி - அம்மைநோய்
வைடூரியம் - பூனைக்கண்மணி, ஒளிமணி
வைதிகம் - மறையியல் நெறி
வைத்தியம் - மருத்துவம்
வைபவம் - கொண்டாட்டம், நிகழ்ச்சி
வைராக்கியம் - வெறுப்ப